தினமணி

**தமிழக நதிகளை இணைக்க கலாம் யோசனை**

First Published : 09 Jan 2012 02:13:27 AM IST



சென்னை புத்தகக் கண்காட்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமுடன், (அமர்ந்திருப்பவர்க

சென்னை, ஜன.8: தமிழக நதிகளை இணைத்தால் தண்ணீருக்காக, அண்டை மாநிலங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்று குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் யோசனை தெரிவித்தார்.

இதற்கு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சென்னை புத்தகக் கண்காட்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பேசியது:

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் வடிவேலன் எழுதிய "உழுதவன் கணக்கு', காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சோமராமசாமி எழுதிய "செயற்கைகோளின் பார்வையில் தமிழக நதிகள்' என்ற இரண்டு நூல்களையும் கடந்த வாரம் வாசித்தேன்.

துல்லியப் பண்ணைத் திட்டம் மூலம் குறைந்த செலவில் அதிக விளைச்சல் விளைவிப்பது எப்படி? என்பது குறித்து உழுதவன் கணக்கு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளும், தொழில்முனைவோரும் இதுபோன்ற புத்தகங்களை படிப்பது மிகவும் அவசியம்.

செயற்கைகோளின் பார்வையில் தமிழக நதிகள் என்ற நூலில் தமிழக நதிகளின் பிறப்பிடம், அது பிறந்து ஓடும் மலைப்பகுதி, சமவெளிப்பகுதி உள்ளிட்டவை குறித்தும், நதிகள் ஓடுவதால் நிலத்தின் மேற்பரப்பு, பூமிக்குள் வரும் மாற்றங்கள் குறித்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பாயும் காவிரி, தாமிரபரணி, பாலாறு உள்ளிட்ட நதிகளை இணைத்து நீர்வழிச்சாலை அமைத்தால் 100 டிஎம்சி தண்ணீரை தேக்கிவைக்க முடியும்.

இதன் மூலம் தமிழகம் வளமான மாநிலமாக மாறும். எனவே, தண்ணீருக்காக அண்டை மாநிலத்தை தமிழகம் நம்பியிருக்க வேண்டிய அவசியம் இருக்காது.

தமிழகத்தில் இருக்கும் இளைஞர்கள், பொதுமக்கள், மாநில அரசு ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும். இதற்கு தமிழகத்தில் இருக்கும் அரசியல் தலைமை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நதிகளை இணைத்து வளமான தமிழகத்தை அமைக்க அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், கவிஞர்கள் இதற்காக ஒருங்கிணைந்து கனவு காண வேண்டும். அந்தக் கனவு நனவாகும் வரை தூங்கக்கூடாது.

தூக்கத்தில் வருவதல்ல கனவு. தூங்கவிடாமல் செய்வதுதான் கனவு என்றார்.

இந்நிகழ்ச்சியில் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத் தலைவர் ஆர்.எஸ்.சண்முகம், செயலர் எஸ்.வைரவன், புரவலர் நல்லி குப்புசாமி, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**கண்மாய்களின் கண்ணீர்க் கதைகள்**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 09 Jan 2012 03:00:16 AM IST

வாழ்க நீ! எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! நீ வாழ்க! வாழ்க"

இவ்வாறு தேசபக்திக் கவிஞர் பாரதி வாழ்த்திய மகாத்மா மறைந்துவிட்டாலும் அவருடைய ஆன்மா நல்லதையே எண்ணி நாட்டுப்பணி செய்யும் நல்ல உள்ளங்களில் வாழும் சூழ்நிலையில், மகாத்மா காந்தியின் பெயரால் இன்றைய இந்தியாவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மாபெரும் ஊழல் திட்டமாகிவிட்டது.

கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டத்தின் முக்கியப் பணியான ஏரி, குள நீர்ப்பாசனத் திட்டத்துக்கு 1,10,000 கோடி ரூபாய் செலவழித்தும்கூட ஏரி, குளம் நிரம்பவில்லை. வேளாண் உற்பத்திக்குரிய நீராதாரங்களுக்கு இந்த அளவு பணம் ஏறத்தாழ ஸ்பெக்ட்ரம் ஊழல் பணத்தின் அதே அளவு செலவாகியும் விவசாயம் செழிக்கவில்லை. விவசாயிகளின் தற்கொலைகள் தொடர் கதைகளாக உள்ளன. மழைநீர் சேமிக்கப்படாமல் வடிந்து காய்ந்து கொண்டிருக்கும் கண்மாய்களும் காந்தியை நினைத்துத் தண்ணீரைக் காணாமல் கண்ணீர் வடிப்பதை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் என்று நீட்டி முழக்கிச் சொல்வதை கிராம மக்கள் ரத்தினச் சுருக்கமாகக் "குளத்து வேலைத் திட்டம்' என்று கூறுவதால் நாமும் இனி அதே சொல்லைப் பயன்படுத்துவோம். இத்திட்டத்தின் செயல்பாடுகளைப் பற்றிய பொருளாதார மதிப்பீட்டு அறிக்கை எதுவும் வெளிவரவில்லை. அரசாங்கம் தரும் புள்ளிவிவரம் அவ்வப்போது மத்திய அமைச்சர்களின் பேச்சுகளையும் கணக்கில்கொண்டு கவனிப்போம்.

முதலாவதாக, குளத்து வேலைத்திட்டத்தால் சுமார் 6 கோடி மக்கள் வறுமைக்கோட்டுக்கு மேல் உயர்ந்துவிட்டதாக ஒரு தகவல். குறிப்பாக, 2006 - 07 முதல் 2010 - 11 வரை செல்லும்போது கிராம மக்களின் வருமானம் 2 மடங்கு உயர்ந்துவிட்டதாகவும் தகவல். கிராம மக்களின் கூலி உயர்வைப் பற்றிப் பேசும் அதேசமயம், இக்குளத்து வேலைத்திட்டத்தால் விவசாயம் வளம்பெற்று உற்பத்தி உயர்ந்துள்ளதா? இக்கேள்விக்கு விடை இல்லை.

சாதனைக்குரிய குளத்துவேலைத் திட்டப் புள்ளிவிவரங்கள் நம்மை மலைக்க வைக்கின்றன. 2006 - 2007 முதல் 2010 -2011 வரை சுமார் 5 லட்சம் கண்மாய்கள் தூர்வாரப்பட்டு நீர் நிரப்பப்பட்டுள்ளன. சுமார் 3.02 மில்லியன் கியூபிக் மீட்டர் கொள்ளளவுக்குக் கண்மாய்கள் நிரம்பியுள்ளன. 16,93,716 கி.மீ. தூரம் பாசனக் கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன.

தனிப்பட்ட முறையில் இந்தத் திட்டத்திலும் இட ஒதுக்கீடு உண்டு. ஷெட்யூல்டு - பழங்குடி நலனுக்கு அவர்களுடைய நிலத்தில் 6 லட்சம் ஹெக்டேர் அளவில் பாசன வசதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சாதனைகள் நிஜமாயிருந்தால் விவசாய உற்பத்தியில் உலகிலேயே இந்தியா முதலிடம் பெற்றிருக்க வேண்டும். ரூபாய் மதிப்பு உயர்ந்திருக்க வேண்டும். பணவீக்கம் பஞ்சாய்ப் பறந்து நமது ரூபாய்கள் டாலரை ஒரு மிதி மிதித்திருக்கும். எனினும் மேற்படி புள்ளிவிவரங்களை மத்திய அரசின் கிராமிய வளர்ச்சி அமைச்சரகம் நிஜம் என்று நம்பச் சொல்வதால் நம்ப வேண்டியது நமது கடமை. எனினும், சில நிஜங்களை நாம் ஆதாரத்துடன் பேச வேண்டியதும் நம் கடமை.

ஒரு கண்மாய்க்கு நீர்வரத்துக் கால்வாய் இருக்கும். நீர் வந்து சேரும் கால்வாயைச் சுத்தப்படுத்தாமல் கண்மாயைச் சுத்தப்படுத்தியிருப்பார்கள். பணி முடிந்துவிட்ட கணக்கில் கண்மாய் சேர்ந்துவிடும்.

கிராமிய வளர்ச்சி அமைச்சரகம் நிறைவேற்றிவிட்டதாகச் சொல்லப்படும் குளத்து வேலைத் திட்டத்தில் மேற்கூறிய நிஜ உதாரணங்கள் நிறைய இருக்கலாம். அதேசமயம், அமைச்சரகமே நிறைவேற்றப்படாத குளத்து வேலைத் திட்டப்பணிகளின் புள்ளிவிவரங்களையும் வழங்கியுள்ளது.

2007-08-ல் திட்டமிட்டபடி சுமார் ஒரு லட்சம் குளத்து வேலைப் பணி நிறைவேறவில்லையாம். 2010-11-ம் ஆண்டுக்கு வரும்போது ஆண்டுக்கு ஆண்டு லட்சங்கள் பெருகி இன்றைய நிலையில் சுமார் ஏழு லட்சம் குளத்து வேலைத் திட்டப் பணிகளை நிறைவேற்ற முடியவில்லை என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நிறைவேற்றப்படாத ஏழு லட்சம் குளத்து வேலைத் திட்டங்களுக்கும் காரணங்கள் சொல்லப்படுகின்றன.

முதலாவதாக, நூறு நாள் குளத்து வேலைத் திட்டத்தின்கீழ் சராசரியாக 47 நாள்கள்தான் வேலைகள் வழங்கப்படுகின்றன. இந்த 47 நாள்களிலும் வேலைக்கே வராதவர்களும் வந்தவர்களாகக் கணக்கில் இருக்க வாய்ப்புண்டு. ஒரு குளத்து வேலையைத் தொடங்குவதற்கு முன் மேஸ்திரியைப் போல் ஒருவர் நோட்டுடன் நிற்பார். அவரிடம் ஆஜர் சொல்லிவிட்டு வேலை செய்யாமல் டிமிக்கி கொடுக்கும் மங்கையர் திலகங்கள் நிறைய உண்டு. அதை மறந்துவிட்டு கவனித்தால் குறைந்தது ஆறு மணி நேரமாவது வேலை செய்ய வேண்டும். ""நீ கொடுக்கற 70 ரூபாய் காசுக்கு எவ்வளவு வேலை வாங்கிற" என்று அலுத்துக்கொண்டு, வேலை செய்வார்கள். மாலை சுமார் ஐந்து மணிக்கு ஒரு கண்கொள்ளாக் காட்சி உண்டு. தலையில் சும்மாடு, உடை, மண்வெட்டி சகிதம் வேலை செய்த களைப்பே இல்லாமல் பெண்கள் கூட்டமாகத் திரும்புவதை விஷயம் தெரியாதவர்கள் கவனித்தால் ""ஐயோ, பாவம்" என்று கூட எண்ணலாம். திட்டமிட்டபடி வேலை முடியவில்லையென்றால் வேலை நாள்கள் குறைவு என்பதும் அதைவிட வேலை செய்வதில் உள்ள மெத்தனமும் முக்கியக் காரணம்.

இரண்டாவதாக, இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் உள்ள தடை. முட்புதர்களை அகற்றுவதற்கு டோசர் வேண்டும். ஆழமாகத் தோண்டவும் டோசர் வேண்டும்.

நிஜமாகவே ஏரி, குளங்களை ஆழப்படுத்தவும், கரைகளைப் பலப்படுத்தவும், நீர்வரத்துக் கால்வாய் வெட்டவும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலமே திட்டமிட்டபடி குளத்து

வேலைகளை நிறைவேற்ற முடியும். கிராமங்களில் உழைப்புக்கு நல்ல தேவை உள்ளதால் இயந்திரங்களைப் பயன்படுத்துவதால் ஏழைகள் பட்டினி கிடப்பார்கள் என்று நினைப்பது மதியீனம்.

சாலைப் பணிகளுக்கு எவ்வாறு ஜே.சி.பி., டோசர் அனுமதிக்கப்படுகிறதோ அவ்வாறே குளத்து வேலைகளுக்கும் அனுமதிக்கப்படுவது நன்று. சாலை வேலைக்கும், விவசாய வேலைக்கும் அனுமதிக்கப்படும் இயந்திரங்கள் குளத்து வேலைக்கு மட்டும் அனுமதியை மறுப்பதால் காந்தியம் காப்பாற்றப்பட்டுவிடாது. உழைப்பில் உற்பத்தித்திறன் வேண்டும்.

எனினும், நிறைவேற்றப்பட்ட குளத்து வேலைத் திட்டத்தால் பாசன நீர் பெருகி ஓடியும் விவசாய உற்பத்தி கணிசமாக ஏன் உயரவில்லை? இந்தக் கேள்விக்குரிய பதில் அண்ணா ஹசாரே உருவாக்கிய ராலேகான் சித்திக்கும் ஹிவாரே பஜாரும் பதில் சொல்லும். நிறைவேற்றப்பட்ட குளத்துப் பணிகளில் அவற்றின் பயன்பாடு பற்றிய திட்டமோ யோசனையோ இல்லை. சொல்லப்போனால், மகாத்மா காந்தி குளத்து வேலைத் திட்டமே ராலேகான் சித்திக் கிராமத்தில் அண்ணா ஹசாரே பெற்ற வெற்றியால் ஊக்கம் பெற்றுள்ளது.

மேற்படி வெற்றி கிராமங்களில் நன்கு திட்டமிடப்பட்டு விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கிராமிய அளவில் திட்டமிடும்போது, வனத்துறை, கால்நடைத் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்களையும் பங்கேற்க வைத்து நீர் வடிப்பகுதி கட்டுமானப் பொறியாளர்கள், விவசாயிகள் செயல்பட்டனர். குளத்து வேலைத் திட்டத்தில் நீர் வரத்துக் கால்வாய்கள் சீர்செய்யப்பட்டன. மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட்டது. மரநடவுக்குரிய நிலம் ஒதுக்கப்பட்டது.

விவசாய நிலம் ஒதுக்கப்பட்டு என்ன பயிர் வைக்கலாம் என்ற அளவில் யோசிக்கப்பட்டது. நீர் வரும் பாதை, நீர் நிரம்பியதும் வாய்மடை மூலம் வயலுக்குள் நீர் பாயும் வாய்க்கால் வரை குளத்து வேலைத் திட்டம் முழுமையாகச் செயல்பட்டது. கறவைப்பசு, தீவனப்புல் சாகுபடி, பால் உற்பத்தி, வெங்காய உற்பத்தி, புஞ்சை தானியம், பருப்பு வகை சாகுபடி, பழமரங்கள் என்று கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் அண்ணா ஹசாரே கிராமங்களில் முழுமையாக நிறைவேற்றப்பட்டன.

மேற்கூறிய முறையில் குளத்து வேலைத் திட்டம் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப செயல்பட்டால்தான் விவசாயம் செழிக்கும். நிஜமான நடப்பு வேறு. வந்த பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்பதே ஊராட்சி லட்சியம். உருப்படியான திட்டமில்லாமல்

வழங்கப்பட்ட பணத்தில் பொய்க்கணக்கு எழுதிச் சுருட்டியது போக மீதியில், ஊரில் உள்ள குளங்களில் உள்ள புற்களை மேலோட்டமாக வெட்டுவார்கள். நீர்ப்படுகையில் உள்ள மூலைகளில் சற்று மண் அகற்றப்பட்டு வேலை நடந்து முடிந்ததுபோல் பாவ்லா காட்டப்படும்.

இவை எல்லாவற்றையும் மீறி ஒரு சில ஊர்களில் மக்களின் ஒத்துழைப்பால் குளத்து வேலைத் திட்டம் சிறப்புடன் நடப்பதும் உண்டு. ஆனால், தண்ணீர் இருந்தும் விவசாயம் செய்யும் ஆர்வம் இல்லாமல் தேக்கப்பட்ட நீர் பயனாவது இல்லை. விவசாயம் செய்து விளைந்து அதை விற்று என்ன லாபம் கிடைக்கப் போகிறது என்ற பயத்தில் விவசாயிகள் கூலி வேலைக்குச் சென்று விடுவதும் நிகழ்கிறது.

பாரம்பரியமாக ஆற்று நீர்ப்பாசனம் உள்ள வயல்களிலும், பெரிய ஏரிப்பாசனம் உள்ள வயல்களிலும், சேற்று நிலங்களிலும் நெல், கரும்பு தொடர்ந்து பயிராகலாம். மற்றபடி புஞ்சை நிலப் பயிர்கள் பூஞ்சையாகவும், பூஜ்ஜியமாகவும் மாறி வருகிறது. இது ஒரு பக்கத்துக் காட்சி.

ஒட்டுமொத்தமாகக் கவனித்தால் "மழைநீர் சேமிப்பு', "நீர்வடிப்பகுதி மேம்பாடு' என்ற திட்டமெல்லாம் கருணா மூர்த்தி காந்தி மகாத்மா - அகிம்சா தர்மாத்மாவின் பெயரில் குளத்து வேலைகளாக மாறி மாபெரும் ஊழல் திட்டங்களாகக் கொள்ளை போய்க் கொண்டிருக்கின்றன. வாய்மடை கட்டாமல் கண்மாய்கள் கண்கலங்கி அழுகின்றன. நீர்வரத்து இல்லாமல் கண்மாய்கள் அழுகின்றன. மகாத்மாவின் பெயரைச் சொல்லி இயங்கும் இந்த நாட்டின் குளத்து வேலைத் திட்டத்தில் மக்களை உழைக்காமலேயே ஊதியம் பெற வைக்கும் வசதியை காந்தியும் மன்னிக்க மாட்டார். காரல் மார்க்ஸ்ýம் மன்னிக்க மாட்டார்.

**தலையங்கம்:அவன்தான் மனிதன்!**

First Published : 09 Jan 2012 03:10:09 AM IST

Last Updated : 09 Jan 2012 05:12:46 AM IST

முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய பிரிட்டிஷ் பொறியாளர் பென்னி குயிக்குக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருப்பது, பாராட்டுக்குரியது. இதற்காக "தினமணி' சார்பில் முதல்வருக்கு நன்றியைப் பதிவு செய்கின்றோம்.

முல்லைப் பெரியாறு தொடர்பாக தமிழ்நாடு, கேரள மாநிலங்கள் கருத்து மாறுபாடு கொண்டிருக்கும் நேரத்தில் செய்யப்பட்டுள்ள இந்த அறிவிப்பை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தேவையில்லை. 1911-ம் ஆண்டு மார்ச் 9-ம் தேதி மறைந்த பென்னிகுயிக் நினைவு நூற்றாண்டு விழாவின் தொடக்கமாகவே தற்போதைய அறிவிப்பைக் கொள்ள வேண்டும்.

தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வுக்கு உயிர் கொடுத்தவர் பென்னி குயிக். அந்த மாபெரும் மனிதரைப் பல குடும்பங்கள் தெய்வமாக மதித்தன. இன்றும்கூட பல வீடுகளில் தங்கள் முன்னோர் படங்களுடன் பென்னி குயிக் படத்தையும் இடம்பெறச் செய்துள்ளனர். ஆனால், இந்த அளவுக்கு அந்த மாமனிதரை தமிழகத்தின் பிற பகுதியில் உள்ள மக்கள் இன்றும்கூட அறிந்திருக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

பென்னி குயிக்கை ஒவ்வொரு தமிழனும் அறிந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறாக இல்லை. அவரைப் பற்றி அறிந்த பொறியாளர்கள் மத்தியில் மட்டுமே அவர் நினைவுகூரப்படுகிறார். சிறு அளவில் கருத்தரங்குகளில் பேசப்படுகிறார். இப்போது, இந்த மணிமண்டபம் குறித்து தமிழக முதல்வர் அறிவிப்பு செய்திருப்பதன் மூலம், தமிழர் அனைவருக்கும் குறிப்பாக, இளம் தலைமுறையினருக்கு இந்த மாபெரும் மனிதரின் அளப்பரிய சேவை மீண்டும் கொண்டு செல்லப்படுகிறது.

1858-ல் பிரிட்டிஷ் அரசில் ராயல் பொறியாளராகச் சேர்ந்தது முதல் தமிழகத்தை மிக நுட்பமாகக் கவனித்து அதன் தேவைகளை உணர்ந்தவர் பென்னி குயிக். ராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளில் சென்ற நூற்றாண்டில் கடும் வறட்சி ஏற்பட்டு, பட்டினிச் சாவுகள் நேரிட்டதைப் பார்த்து மனம் வருந்தியவர். மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி, ஓடி, கடலில் வீணாகிப் போகும் தண்ணீரைத் தமிழகத்துக்குத் திருப்பும் திட்டத்தை உருவாக்கியவர். பலத்த மழை வெள்ளத்தால் பணிகள் பாதிக்கப்பட்டபோது, பிரிட்டிஷ் அரசு இத்திட்டத்துக்கு நிதிஒதுக்குவதில் மெத்தனம் காட்டியது. பணி முடங்கிவிடக்கூடாது என்பதற்காக இங்கிலாந்தில் இருந்த தன் சொத்துகளை விற்று, இந்த அணையைக் கட்டி முடித்தவர்.

தெருச் சாக்கடை திட்டத்துக்கும்கூட 10 விழுக்காடு எதிர்பார்க்கும் இந்த நாளில், தன் சொத்துகளை விற்று அணையைக் கட்டி முடிக்க பென்னி குயிக் முற்பட்டதன் காரணம், நம்மவர்களைவிட ஆங்கிலேயரான அவர் இந்த மக்களின் வேதனையைப் புரிந்துகொண்டவர் என்பதுதான்.

அணுக முடியாத காட்டுப் பகுதியில், பல்வேறு இடையூறுகளுக்கு இடையிலும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி முடித்தது மட்டுமல்ல, எத்தகைய வெள்ளம் வந்தாலும் தாங்கி நிற்கும் அளவுக்கு இந்த அணையைப் புவியீர்ப்பு விசை அணையாகக் கட்டினார். அதாவது, அணையில் 156 அடி உயரத்துக்குத் தண்ணீர் தேங்கும்போது, அணையைத் தகர்த்து வெளியேற முட்டுகின்ற நீரின் விசையைத் தாங்கும் அளவுக்கு, அணையின் மொத்த எடை (அல்லது நிறை) இருக்கும் வகையில் அமைக்கப்படுவதே புவியீர்ப்பு விசை அணை!

கற்களாலும் சுண்ணாம்பாலும் அமைந்த இந்த அணையின் நிறை மேலும் கூட்டப்பட்டுள்ளதே தவிர, கொஞ்சமும் குறையவில்லை. ஆனால், 156 அடி உயரத்துக்கு நீர் தேக்காமல், தற்போது 132 அடி உயரம்தான் தண்ணீர் தேக்கப்படுகிறது. அதாவது அணை நீரின் விசை மிகவும் குறைந்துவிட்டது. ஆனால், கேரளத்தின் அழுகுணிக் குரல் மட்டும் ஓங்கி ஒலிக்கிறது.

தமிழக அரசு மணிமண்டபத்துடன் நின்றுவிடக்கூடாது. இந்த மணிமண்டப வளாகத்தைப் பென்னி குயிக் பாசன மேலாண்மை மையமாக மாற்ற வேண்டும். தமிழ்நாட்டில் நிலவிய பாசன முறைகள் குறித்து பயிற்றுவிக்கும் கல்லூரிகள் இன்றில்லை. அண்ணா பல்கலைக்கழகத்தில் மட்டும் பாசன மேலாண்மைக்கான படிப்பு இருக்கின்றது. திருச்சி துவாக்குடியில் பாசன மேலாண்மைப் பயிற்சி மையம் உள்ளது. இங்கு பொதுப் பணித் துறையில் உள்ளவர்களுக்கு சுழற்சி முறையில், விருப்ப முறையில் புத்தொளிப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மிகச் சிறிய எண்ணிக்கையில் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனாலும் இது போதாது.

பாசன மேலாண்மை என்பது முக்கியமாக கடைக்கோடியில் உள்ள சாதாரண விவசாயிகளுக்குத்தான் அளிக்கப்பட வேண்டும். ஏரி, குளங்களில் தேங்கும் நீர் அளவு என்ன, எந்த அளவுக்கு நீர் தேங்கினால் எந்தெந்த நீர்ப் போக்கியைப் பயன்படுத்தலாம், எந்தெந்த மதகுகளைத் திறக்கலாம் என்பதற்கு கரைகளிலும், மதகுகளிலும் அடையாளம் வைத்த தமிழர்களின் பாசன அறிவு இன்று பயன்படுத்தப்படவில்லை. பாசன மேலாண்மையில் நிலவிய தமிழ்ச் சொற்களைக்கூட இன்றைய விவசாயிகள் அறிந்திருக்கவில்லை.

ஒவ்வொரு பாசனக் கால்வாயையும், ஏரிகளையும், குளங்களையும் மீண்டும் விவசாயிகளிடமே ஒப்படைப்பதுதான் தமிழக பாசனத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக இருக்கும். தேவைக்கேற்ப அணை நீரைத் திறப்பதும், வாய்க்கால் தூர் வாருவதும் அந்தந்தப் பகுதி விவசாயிகளின் பொறுப்பில்விட்டு, அளிக்கப்பட்ட நிதி சரியாகச் செலவிடப்பட்டதா என்கின்ற தணிக்கையை மட்டுமே அரசு மேற்கொள்ளும் நிலைமை உருவாக வேண்டும். இதற்கு சாதாரண விவசாயிகள் அளவில் பாசன மேலாண்மை குறித்த அறிவும் பயிற்சியும் அவசியம்.

தமிழர் வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணிப்பு செய்த பென்னி குயிக் மணிமண்டப வளாகம், தமிழகத்தின் சிறுவிவசாயிகளுக்கு தங்கள் பகுதி நீராதாரத்தை எப்படிச் செவ்வனே பயன்படுத்தலாம் என்பதைச் சொல்லித் தரும் வளாகமாக மாறட்டும்.

**கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்**

First Published : 08 Jan 2012 12:57:37 PM IST

திருக்காட்டுப்பள்ளி, ஜன. 7: பூதலூர் ஒன்றியம், புதுக்குடியில் அண்மையில் நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாமில் 1,051 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், புதுக்குடி ஊராட்சி மன்ற வளாகத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் வைஜயந்திமாலா அன்புமணி தலைமை வகித்தார். துணைத் தலைவர் எம். செந்தில்குமார், கால்நடை உதவி மருத்துவர் செ. கெப்ரி பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில், 1,051 கால்நடைகளுக்கு தடுப்பூசி, குடல்புழு நீக்கம், மலடு நீக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர், சிறந்த முறையில் கால்நடைகளை பராமரித்த கலப்பின காளைகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இதில், கால்நடை ஆய்வாளர் குழுத் தலைவர் அ. ஞானசேகர், ஆய்வாளர்கள் அ. முத்துராஜா, பி. நாகராணி, முத்தமிழ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சொட்டுநீர் பாசனத் திட்ட ஆலோசனை கூட்டம்**

First Published : 08 Jan 2012 09:29:10 AM IST

போடி, ஜன. 7: போடியில் நடைபெற்ற சொட்டு நீர் பாசன திட்ட ஆலோசனை கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

தோட்டக்கலைத் துறை சார்பில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின்படி, போடி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. போடி தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.கெர்சோன் தங்கராஜ் தலைமை வகித்தார்.

போடி வட்டாட்சியர் நா.நாகமலை பங்கேற்று சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் அரசு வழங்குவது குறித்து விளக்கிப் பேசினார்.

நிகழ்ச்சியில் சொட்டுநீர் பாசனத்தின் செயல்பாடு, அதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கப்பட்டன.

சொட்டுநீர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கு வழங்க வேண்டிய ஆவணங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் அ.ஜெகப்பிரியாபதி, தோட்டக்கலை அலுவலர் ப.வெள்ளைத்துரை ஆகியோர் மண் மாதிரி சேகரிப்பது குறித்தும், தோட்டக்கலை பயிர்களுக்கு அரசு வழங்கும் மானியம் குறித்தும் விளக்கினர்.

நிகழ்ச்சியில் வருவாய் ஆய்வாளர்கள் போடி முத்துராஜ், கோடாங்கிபட்டி புவனேஸ்வரி, ராசிங்காபுரம் ராஜலட்சுமி மற்றும் தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர்கள், சொட்டு நீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**"மரவள்ளிக் கிழங்குக்கு ஆதார விலை வேண்டும்'**

First Published : 08 Jan 2012 12:23:29 PM IST

ஈரோடு, ஜன. 7: மரவள்ளிக் கிழங்கு பயிருக்கு மத்திய அரசு ஆதார விலையை அறிவிக்க வேண்டும் என்று கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கள் இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் அமைப்பாளர் ராமசாமி தலைமையில் ஈரோட்டில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கிராமப் பொருளாதாரத்தை மீட்கவும், பனை, தென்னை மரங்களைக் காக்கவும் வலியுறுத்தி 21ம் தேதியில் இருந்து 26ம் தேதி வரை, கன்னியாகுமரி முதல் சென்னை வரையிலான விழிப்புணர்வுப் பிரசாரப் பயணம் மேற்கொள்ளப்படும்.

காங்கேயம் கால்நடைகளை காக்க அரசு முன்வர வேண்டும். ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிதாக அமைந்துள்ள அரசு தென்னை விவசாயிகள் மற்றும் பனை தொழிலாளர் நலவாரியத்துக்கு பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும்.

இந்திய அளவில் வலுவான லோக்பால் அமைக்கவும், மாநில அளவில் லோக் ஆயுக்தா அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்; தமிழகத்தில் மதுவிலக்கு கொண்டுவரும் வரை மதுபானங்கள் அனைத்தும் தென்னை, பனை பொருட்களைக் கொண்டே தயாரிக்க வேண்டும், தேர்தல் வாக்குறுதிபடி கரும்புக்கு டன்னுக்கு 2,500 ரூபாய் விலையை அறிவிக்க வேண்டும்.
கடந்த ஆண்டு ஒரு டன் மரவள்ளிக் கிழங்கு 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.
ஆனால் தற்போது 2,700 ரூபாய்க்கு விற்கிறது. மத்திய அரசின் தவறான இறக்குமதிக் கொள்கையால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.
அமிலத்தை ஊற்றி ஜவ்வரிசி தயாரிக்கும் ஆலைகளுக்கான உரிமத்தை ரத்து செய்வதுடன், மரவள்ளி விவசாயிகளை காக்கவும் அரசு முன்வர வேண்டும். சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டுக்கு அனுமதி அளிக்கக் கூடாது.
மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கள் இயக்கத்தின் கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி, தமிழக விவசாயிகள் சங்க நாமக்கல் மாவட்டத் தலைவர் எஸ்.ராமசாமி, கள் இயக்க மாநில அமைப்பாளர் எம்.சி.ராமசாமி, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க செயலாளர்கள் கனகராஜ், கோபிநாத், தங்கராசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உர விலை கொள்கையில் மாற்றம் கோரி ஜன. 23ல் விவசாயிகள் உண்ணாவிரதம்**

First Published : 08 Jan 2012 12:22:43 PM IST

ஈரோடு, ஜன. 7: உர விலை நிர்ணயக் கொள்கையில் மாற்றம் கொண்டுவர வலியுறுத்தி, வரும் 23ம் தேதி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்,
கடந்த சில மாதங்களாக உர விலை கடுமையாக உயர்ந்து வருவதோடு, தமிழகம் முழுவதும் உரத்தட்டுப்பாடு நீடித்து வருகிறது. தொடர்ந்து உயர்ந்துவரும் உர விலையைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.
விலை உயர்வுக்கு உரவிலை நிர்ணயக் கொள்கையில் மத்தியஅரசு கொண்டுவந்த மாற்றமே காரணம் என்றும், இந்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்றும் விவசாயிகள் கோரி வருகின்றனர்.
இக்கோரிக்கையை வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஈரோட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தலைவர் பெரியசாமி கூறியது:
மத்திய அரசு மேற்கொண்டுவரும் உரவிலை நிர்ணயக் கொள்கையால் உரங்களின் விலை கடந்த ஓராண்டு காலமாக தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை ஏடிபி உரம் ரூ. 650 லிருந்து ரூ. 910ஆக உயர்ந்துள்ளது. மேலும் விலை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

மத்திய அரசின் கொள்கை முடிவானது விவசாயிகளுக்கு எதிராக உள்ளது. இதுகுறித்து பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு செவிசாய்க்காமல் உள்ளது. மத்திய அரசின் இந்த அலட்சிய போக்கைக் கண்டித்து ஈரோட்டில் வரும் 23ம் தேதி விவசாயிகள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 08 Jan 2012 12:23:03 PM IST

ஈரோடு, ஜன. 7: பவானிசாகர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை 82.60 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 681 கனஅடி தண்ணீர் வந்தது. ஆற்றில் விநாடிக்கு 700 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்இருப்பு 17.11 டிஎம்சி.

**மழை குறைவால் பயிர்கள் அழிவு: விவசாயிகள் கவலை**

First Published : 08 Jan 2012 10:18:33 AM IST

கமுதி, ஜன. 7 : கமுதி தாலுகாவில் 2011-ல் பருவமழை குறைவாகப் பெய்ததால், சுமார் 23,300 ஹெக்டர் பரப்பளவுக்கு பயிர்கள் விளையாமல் அழிந்துள்ளன. இதனால், விவசாயிகளுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கமுதி தாலுகாவில் 2010-ல் ஜனவர் முதல் டிசம்பர் முடிய 964 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது. ஆனால 2011-ல் ஜனவரி முதல் டிசம்பர் முடிய 557 மி.மீ. அளவு மழையே பெய்துள்ளது. 407 மி.மீ. மழையளவு குறைந்துள்ளது.

இதனால் பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் பல இடங்களில் வாடி, வதங்கியுள்ளன.

இனிமேலும் பயிர்கள் வளர்ந்து மகசூல் கிடைக்கும் வாய்ப்பே என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கமுதி தாலுகாவில் 12,200 ஹெக்டரில் நெற்பயிர்களும், சுமார் 3,400 ஹெக்டரில் சோளம், மக்காச்சோளம், கம்பு, குதிரை வாலி, ராகி ஆகிய தானியப் பயிர்களும், சுமார் 3,100 ஹெக்டேரில் உளுந்து, பாசிப்பயறு, மொச்சை போன்ற பயறுவகை பயிர்களும், சுமார் 200 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்து பயிர்களும், சுமார் 2,600 ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய், மல்லி ஆகிய தோட்டப் பயிர்களும் சரியாக விளையாமல் போனதாக கமுதி வட்டார வேளாண்மைத் துறையினர் கணக்கெடுத்துள்ளனர்.

பருவமழை குறைவாக பெய்துள்ளதால், பம்புசெட், கிணறு மற்றும் நீர்ப்பாசன வசதியுடைய விவசாயிகள், கோடைகாலப் பயிர்கள் விவசாயத்துக்கு கமுதி வட்டார வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

முக்கிய பொருட்கள் இறக்குமதி 42 சதவீதம் உயர்வு

ஜனவரி 08,2012,06:20



புதுடில்லி : முக்கிய பொருட்கள் இறக்குமதி, ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான எட்டு மாத காலத்தில், 57 ஆயிரத்து 399 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே கால இறக்குமதியுடன் ஒப்பிடுகையில், 41.8 சதவீதம் அதிகமாகும்.

மதிப்பீட்டு காலத்தில், உணவு எண்ணெய் இறக்குமதி, 67.6 சதவீதம் உயர்ந்து, 26 ஆயிரத்து 622 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதில், கச்சா பாமாயில் இறக்குமதி வெகுவாக உயர்ந்துள்ளது. மேலும், கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி முறையே, 68.3 சதவீதம் மற்றும் 62.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

மதிப்பீட்டு காலத்தில், மோட்டார் வாகனம், பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், ரப்பர், பருத்தி மற்றும் பட்டு, நறுமணப் பொருட்கள், மார்பிள், கிரானைட், மதுபானங்கள், தேயிலை மற்றும் காபி ஆகியவற்றின் இறக்குமதியும் உயர்ந்துள்ளது. அதேசமயம், பால் மற்றும் பால் பொருட்கள், உணவு தானியங்கள் ஆகியவற்றின் இறக்குமதி குறைந்துள்ளது.

இந்தோனேஷியா, சீனா, மலேசியா, அர்ஜென்டினா, ஜெர்மனி, கொரியா, அமெரிக்கா, உக்ரைன், கனடா, ஜப்பான், தாய்லாந்து, கானா, பெனின், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதி அதிகரித்துள்ளது. அதேசமயம், மியான்மர், பிரேசில் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து செய்து கொள்ளப்படும் இறக்குமதி குறைந்துள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,00:46 IST

கருத்தை பதிவு செய்ய

கிள்ளை : சிதம்பரம் அருகே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. கால்நடை பராமரிப்புத் துறை, சிதம்பரம் அரிமா சங்கம் மற்றும் ராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி என்.எஸ்.எஸ்., சார்பில் சிதம்பரம் அடுத்த நக்கரவந்தன்குடியில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. தலைமை ஆசிரியர் தர்பாரண்யன் தலைமை தாங்கினார். என்.எஸ்.எஸ்., அலுவலர் ஞானமூர்த்தி வரவேற்றார். சிதம்பரம் அரிமா சங்கத் தலைவர் ரமேஷ்சந்த், பொருளாளர் வெங்கடேசன் முன்னிலை வகித்தனர். ஊராட்சித் தலைவர் குலசேகர் முகாமை துவக்கி வைத்தார். கால் நடை டாக்டர் பூங்குழலி, ஆய்வாளர் மாசிலாமணி, செயற்கை கருவூட்டல் பயிற்றுனர் சக்திவேல் உள்ளிட்ட கால்நடை மருத்துவக் குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.

**"தானே' புயலால் சவுக்கு பயிர்கள் பாதிப்பு : நிவாரணம் கிடைக்காமல் விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:30 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் "தானே' புயலால் பாதித்த சவுக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கணக்கெடுக்க மறுக்கும் அதிகாரிகளால் விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது நெல் சாகுபடிக்கு அடுத்ததாக அதிக பரப்பளவில் சவுக்கு சாகுபடி செய்யப்படுகின்றன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தால் ஆட்கள் பற்றாக்குறை மற்றும் நெல் உள்ளிட்ட பொருட்களின் விலை வீழ்ச்சி, விவசாய உரங்களின் கடும் விலை ஏற்றம் போன்ற காரணங்களால் பெரும்பாலான விவசாயிகள் சவுக்கு பயிர் செய்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் கரும்பு பயிர்கள் சாகுபடி செய்து உரிய காலத்தில் "கட்டிங் ஆர்டர்' கிடைக்காததால் தீ வைத்து எரித்த விவசாயிகள், அவற்றை ஈடு செய்ய சவுக்கு பயிருக்கு மாறியுள்ளனர். விழுப்புரம் மாவட்டம் முழுவதும் 5 லட்சம் ஏக்கருக்கு மேல் தற்போது சவுக்கு பயிர் செய்யப்பட்டுள்ளன.

காகித உற்பத்தி, வீடு கட்டுதல், எரி பொருளாகவும் சவுக்கு பயன்படுவதால் இவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. மேலும் ஆண்டு தோறும் அரசு மற்றும் தனியார் பேப்பர் மில்கள் விலை உயர்வும் வழங்கி வருகின்றனர். இதனால் விவசாயிகள் அதிக ஆர்வமுடன் நெல் சாகுபடி செய்யும் இடங்களில் கூட தற்போது சவுக்கு பயிர் செய்துள்ளனர். 3 முதல் 4 ஆண்டுகளில் ஒரு ஏக்கர் சவுக்கு ஒரு லட்சம் முதல் 1.50 லட்சம் வரை விலை போவதால் தற்போது பல்வேறு நவீன உக்திகளை பயன்படுத்தியும், உரங்கள் இட்டும் சவுக்கு சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் "தானே' புயல் காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் பல ஆயிரம் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த சவுக்க வேரோடும், நடுவில் முறிந்தும் விழுந்து சேதம் ஏற்பட்டுள்ளது. எவ்வளவு மழை பெய்தாலும் அதிகம் பாதிப்பு இல்லாமல் தாக்குப் பிடிக்கும் தன்மையுள்ள சவுக்கு மரங்கள், 125 கி.மீ., வேகத்தில், தொடர்ந்து பல மணி நேரம் பலத்த காற்று வீசியதால் கடுமையாக பாதித்துள்ளது. மூன்றாண்டுகளை கடந்த மரங்கள் என்றால் கூட விற்பனை செய்து ஓரளவிற்கு விவசாயிகள் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்வார்கள். இருப்பினும் நடவு செய்து 2 ஆண்டிற்கு உட்பட்ட சவுக்கு மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டதால் லட்சக் கணக்கில் பணம் செலவு செய்த விவசாயிகள் கடுமையாக பாதித்துள்ளனர்.

இவ்வாறு பாதித்த விவசாயிகள் நிவாரண உதவிக் கோரி வி.ஏ.ஓ.,க்கள் மற்றும் வேளாண்துறை அதிகாரிகளை அணுகும் போது சவுக்கிற்கு நிவாரணம் இல்லை என்று கூறி அலைக் கழிக்கின்றனர். எனவே கலெக்டர் துரித நடவடிக்கை எடுத்து பாதிப்பிற்குள்ளான சவுக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மரக்காணத்தில் புயல் மழையால் உப்பு உற்பத்தி கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:47 IST

மரக்காணம் : மரக்காணத்தில் தானே புயல் காரணமாக உப்பு உற் பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேதாரண்யம், தூத்துக்குடிக்கு அடுத்ததாக மரக்காணம் பகுதியில்தான் அதிகளவில் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. இங்கு உற்பத்தியாகும் உப்பு தொழிற்சாலைகள், அரசு கூட்டுறவு கடைகள், தனியார் கடைகள் மற்றும் பிற மாநிலங்களுக்கும் சப்ளை செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் ஜனவரி மாத கடைசியில் உப்பு உற் பத்தியை துவங்கும் தொழிலாளிகள் செப்டம்பர் மாதம் உற்பத்தியை நிறுத்தி விடுகின்றனர். தானே புயல் மழையால் மரக்காணம் பகுதியில் உள்ள உப்பளங்களில் தண் ணீர் சூழ்ந்துள்ளது. பாத்திகளில் தேங்கியுள்ள மழைநீர் வடிவதற்கு 2 மாதங்களாகும் சூழ்நிலை உள்ளது. இதனால் மரக்காணம் பகுதியில் மீண்டும் உற்பத்தி துவங்குவதற்கு மூன்று மாதங்கள் தேவைப்படுமென உற்பத்தியாளர்கள் கூறினர்.

**வனப்பகுதியில் யூக்கலிப்டஸ் மரங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை அவசியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:43 IST

தியாகதுருகம் : தியாகதுருகம், ரிஷிவந்தியம் வனப்பகுதியில் புயலால் உடைந்து விழுந்த யூக்கலிப்டஸ் மரங்களை சமூக விரோதிகள் திருடிசெல்வதற்கு முன் வத்துறையினர் பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும். தியாகதுருகம், ரிஷிவந்தியம் வனப்பகுதியில் சமூக காடுகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் யூக்கலிப்டஸ் மரக்கன்றுகள் நட்டு வளர்த்து வருகின்றனர். குறித்த பருவத்தில் மரங்கள் அறுவடை செய்து பேப்பர் உற்பத்திக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. "தானே' புயல் சீற்றத்தால் வனப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் உடைந்தும், வேரோடும் சாய்ந்து கிடக்கிறது.

இதனை உடனடியாக வெட்டி பேப்பர் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு, அல்லது தனியாரிடம் முறைப்படி விற்பனை செய்தால் அரசுக்கு வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இப்பகுதியில் உள்ள மரங்களை இரவு நேரத்தில் சிலர் வெட்டி திருடி செல்வதை வழக்கமாக கொண் டுள்ளனர். இந்நிலையில் புயலால் உடைந்து கீழே கிடக்கும் மரங்களை அப்படியே விட்டுவிட்டால் எவ்வித சிரமும் இன்றி சமூக விரோத கும்பல் அதனை திருடி செல்ல வாய்ப் புள் ளது. வனத்துறை யினர் விழிப்புடன் செயல்பட்டு அரசுக்கு சொந்தமான மரங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

**மானியத்தில் டிராக்டர், பவர் டில்லர்: வேளாண் பொறியியல் துறை தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:37 IST

விழுப்புரம் : வேளாண் பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் டிராக்டர், டில்லர் உள்ளிட்ட விவசாய இயந்திரங்கள் வழங்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இது குறித்து வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் மணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் இந்த நிதி ஆண்டில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் மத்திய நிதி உதவி திட்டத்தின் கீழ் மானிய விலையில் விவசாயிகள் வேளாண் இயந்திரங்கள் வாங்கிட தமிழக அரசு 45.10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வழங்க 13.10 லட்சம் ரூபாயும், பழங்குடியின விவசாயிகளுக்கு 10.65 லட்சம் ரூபாயும் தனித் தனியாக நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் டிராக்டர், பவர் டில்லர் வாங்க அதிகபட்ச மானியமாக 45 ஆயிரம் ரூபாயும், ரொட்டாவேட்டருக்கு அதிகபட்ச மானியமாக 20 ஆயிரம் ரூபாயும் வேளாண் இயந்திரங்கள் திட்ட நெறிமுறைகளுக்கும், நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டும் வழங்கப்பட உள்ளது. திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள விழுப்புரம், வானூர் பகுதி விவசாயிகள் வழுதரெட்டியில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம். திண்டிவனம், செஞ்சி பகுதி விவசாயிகள் திண்டிவனம் ஜெயபுரம் காலனியில் உள்ள அலுவலகத்திலும், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் விவசாயிகள் கள்ளக்குறிச்சி ஏமப்பேரில் உள்ள அலுவலகத்தையும், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை பகுதி விவசாயிகள் திருக்கோவிலூர் என்.ஜி. ஜி.ஓ., நகரில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகத்திலும் தொடர்புகொண்டு பயன்பெறலாம்.

### ஆத்தூரில் மஞ்சள் ஏலம் 1,356 மூட்டை விற்பனை

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,356 மூட்டை மஞ்சள், 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.
ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.
நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,769 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,959 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,660 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,577 ரூபாய்க்கும் விற்பனையானது.
கடந்த வாரம் மஞ்சள் ஏலம் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 870 ரூபாயும், உருண்டை மஞ்சள், 308 ரூபாயும் அதிரடியாக விலை உயர்ந்துள்ளது.

விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 1,356 மூட்டை மஞ்சள், 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**காவிரியாற்றில் அடித்து செல்லப்பட்டவர்களை மீட்க மேட்டூர் அணை நீர் திறப்பு குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய

ட்டூர்: காவிரியாற்றில் அடித்து செல்லப்பட்ட குடும்பத்தினரை மீட்பதற்காக, மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று மாலை விநாடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டது.

டெல்டா மாவட்டங்களில், புயல்மழை தீவிரம் குறைந்ததால், விநாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு டிசம்பர் 5ம் தேதி விநாடிக்கு, 8 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

பாசனத்துக்கு வெளியேற்றும் நீரில் இருந்து மின்சாரம் தயாரிப்பதாக மேட்டூர் முதல் ஈரோடு வரை காவிரி குறுக்கே செக்கானூர், நெருஞ்சிபேட்டை, கோனேரிபட்டி, ஊராட்சிகோட்டை, அக்ரஹாரம் ஆகிய ஐந்து இடங்களில் கதவணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக, காவிரியில் வெளியேறும் நீரின் மூலம் மேட்டூர் அணை, சுரங்க மின் உற்பத்தி நிலையங்களில் 80 மெகாவாட், கதவணை மின் உற்பத்தி நிலையங்களில் தலா 14 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது.

ஈரோடு அடுத்த வெண்டிபாளையத்தில் புதிதாக அமைத்துள்ள கதவணை மின் உற்பத்தி நிலையத்தில், அவ்வப்போது தண்ணீர் வெளியேற்றி மின் உற்பத்தி செய்யப்படுகிறது. நேற்று, வெண்டிபாளையம் கதவணை மின் உற்பத்தி நிலையத்துக்கு கீழ் பகுதி காவிரியாற்றில், வெளியேற்றப்பட்ட தண்ணீரில், எட்டு அடித்துச் செல்லப்பட்டனர்.

காவிரியாற்றில் தண்ணீர் அதிகம் சென்றதால், தண்ணீரில் அடித்துச் சென்றவர்களை மீட்பதில் சிரமம் ஏற்பட்டது. எனவே, மேட்டூர் அணை நீர் திறப்பை குறைக்குமாறு பொதுப்பணித்துறை தலைமை பொறியாளருக்கு, உயர் அதிகாரிகள் உத்தரவிட்டனர். அதை தொடர்ந்து, நேற்று மாலை 6.30 மணி முதல், மேட்டூர் அணை நீர்திறப்பு விநாடிக்கு, 500 கனஅடியாக குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையில் நீர்திறப்பை குறைத்த போதிலும், ஒவ்வொரு கதவணை மின் உற்பத்தி நிலையங்களிலும் படிப்படியாக நீர்திறப்பை நிறுத்தி, வெண்டிபாளையம் காவிரியாற்றில் தண்ணீரை குறைப்பதற்கு ஐந்து மணிநேரத்துக்கு மேலாகும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின் உற்பத்தி நிறுத்தம்: காவிரியாற்றில் வெளியேற்றிய 8 ஆயிரம் கனஅடி நீர் மூலம் மேட்டூர்

அணை, சுரங்க, கதவணை மின் உற்பத்தி நிலையங்களில், 150 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. காவிரியில் நீர் நிறுத்தப்பட்டதால், நேற்று மாலை 6.30 மணி முதல் அனைத்து நிலையங்களிலும் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

**மானிய விலையில் தீவனப்பொருள் வழங்ககோரி கூட்டத்தில் தீர்மானம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:46 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "கால்நடைத் தீவனங்களை, 50 சதவீத மானிய விலையில், அரசு வழங்க வேண்டும்' என, நாமக்கல்லில் நடந்த, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில குழுக் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல்லில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநிலக் குழு கூட்டம் நடந்தது. மாநில தலைவர் முகமது அலி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் முனுசாமி முன்னிலை வகித்தார். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விபரம்:

பால் உற்பத்தியாளர்களை பாதுகாக்க, பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ஒரு லிட்டருக்கு குறைந்தபட்சம், 25 ரூபாயும், எருமைப் பாலுக்கு, 35 ரூபாயும் வழங்க வேண்டும். கால்நடைத் தீவனங்களை, 50 சதவீத மானிய விலையில், அரசு வழங்க வேண்டும். பாலை அளவிடும்போது சத்துக்குறைவு, அளவுக்குறைவு என திட்டமிட்டு, கூட்டுறவு சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும்.

ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களை பாதுகாக்கும் வகையில், ஏற்கனவே அரசு ஒரு குழுவை அமைத்து ஒழுங்குபடுத்துவதை நடைமுறைப்படுத்த வேண்டும். மாவட்ட ஒன்றியங்களில், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். சங்க செயல்பாட்டிற்கு ஒரு லிட்டருக்கு, ஒரு ரூபாய் வீதம் அரசு வழங்க வேண்டும். கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க மாநில நிர்வாகிகள் முருகேசன், ரத்தினம், சுருளிவேல், சங்கர், ராமநாதன், வரதராஜன், ரங்கசாமி, விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெருமாள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மானிய விலையில் விசைத்தெளிப்பான்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:37 IST

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில், விவசாயிகளுக்கு, மானிய விலையில், விசைத்தெளிப்பான் வழங்கும் விழா

நடந்தது.
துணை சபாநாயகர் தனபால் பங்கேற்று, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, நீர் மற்றும் நிலவளத் திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானிய விலையில் விசைத்தெளிப்பான், எண்ணெய் வித்து பெருக்கும் திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானிய விலையில் கைத்தெளிப்பான் மற்றும் மக்காச்சோளம் சிறுதளைகள் இலவசமாக வழங்கினார்.
தொடர்ந்து, மாவட்ட அளவில் வேளாண் துறை மற்றும் சுகாதாரத் துறை மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் அடங்கிய கையேடு வழங்கி பேசினார். நிகழ்ச்சியில், அரசு அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி சாலை பாதுகாப்பு

வாரவிழா
ராசிபுரம்: இந்திய அரசு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் நேரு யுவகேந்திரா, சமூக பறவைகள் மக்கள் நலச்சங்கம், குருசை தமிழன் லயன்ஸ் சங்கம், செங்குந்தர் மகாஜன மேல்நிலைப்பள்ளி என்.எஸ்.எஸ்., திட்டம் சார்பில், 23வது சாலை பாதுகாப்பு வார விழா, குருசாமிபாளையம் செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியில் கொண்டாடப்பட்டது.
பள்ளிச் செயலாளர் வடிவேல் தலைமை வகித்தார். சமூகப்பறவைகள் மக்கள் நலச்சங்க தலைவர் மேகநாதன் வரவேற்றார். லயன்ஸ் சங்கத் தலைவர் செல்வராஜ், பள்ளி தலைமையாசிரியர் ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ராசிபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் பிரதிபா பங்கேற்று, சாலை பாதுகாப்பு குறித்து விளக்கிப் பேசினார்.
நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் மயில்சாமி, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பேசினார். பிள்ளாநல்லூர் டவுன் பஞ்சாயத்து சேர்மன் மலர்கொடி சைக்கிள் பேரணியை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில், நேரு யுகவேந்திரா மாவட்ட ஆலோசனை குழு உறுப்பினர் தியாகராஜன், டவுன் பஞ்சாயத்து துணை தலைவர் மா÷ஸ்வரன், என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் ரகோத்தமன், சமூக பறவைகள் மக்கள் நலச்சங்க செயலாளர் சீனிவாசன், ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தோட்டக்கலை பயிர் அபிவிருத்திக்கு ரூ.25 கோடி ஒதுக்கீடு: கலெக்டர் தகவல்**
பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,00:35 IST

கருத்தை பதிவு செய்ய
கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களை அபிவிருத்தி செய்ய 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,'' என கலெக்டர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் பழ பயிர்கள் 42 ஆயிரம் ஹெக்டேரிலும், காய் பயிர்கள் 5,200 ஹெக்டேரிலும், பூக்கள் 1,250 ஹெக்டேரிலும், நறுமன பயிர்கள் 800 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், முக்கிய பயிர்களான மா, வாழை, காய்கறி பயிர்களில் தக்காளி, கத்திரி, உருளை கிழங்கு, வெண்டை, பீன்ஸ், முட்டைகோஸ், காலிபிளவர் ஆகியவைகளும், மலர்களில் ரோஜா, மல்லி, கார்னேஷன், ஜெர்பரா ஆகிய பயிர்களும், நறுமண பயிர்களான மஞ்சள், புதினா, மிளகாய் ஆகிய பயிர்கள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது. மோரமடுகு கிராமத்தில் மா அடர்வு முறையில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளதை கலெக்டர் மகேஸ்வரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் மா, மலர், மற்றும் காய்கறி உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதல் இடம் வகிக்கிறது. மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் பயிர் பரப்பினை அதிகரிக்கவும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும், சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை பெருக்கவும் பல்வேறு திட்டங்களை தோட்டக்கலை துறையினர் மூலம் அரசு செயல்படுத்தி வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நுண்ணீர் பாசன திட்டம், தோட்டக்கலை பயிர் பரப்பினை அதிகரித்தல் ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக7,342 ஹெக்டேருக்கு தோட்டக்கலை பயிர்களை அபிவிருத்தி செய்ய 25 கோடியே 36 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஓசூர் ரயில்வே ஸ்டேஷன் முன்ரயில் பயணிகள் ஆர்ப்பாட்டம்ஓசூர்: ஓசூர் வழியாக தென்மாவட்டங்களுக்கு கூடுதல் ரயில் விட கோரி பயணிகள் மேம்பாட்டு நலச்சங்கம் சார்பில், ரயில்வே ஸ்டேஷன் முன் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஓசூர் அசோக்லேலேண்ட் யூனிட்-1, யூனிட்-2 தொழிற்ச்சங்க தலைவர் மைக்கேல் பெர்ணாண்டஸ் தலைமை வகித்தார். பயணிகள் மேம்பாட்டு சங்க தலைவர் சுப்பிரமணி, குடியிருப்போர் நலச்சங்க கூட்டமைப்பு தலைவர் துரை, சி.பி.எம்., ஒன்றிய செயலாளர் சேதுமாதவன், சி.ஐ.டி.யூ., மாநில குழு உறுப்பினர் வாசுதேவன், இந்து முன்னணி செயற்குழு உறுப்பினர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஓசூர்-ஜோலார் பேட்டை ரயில் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும், பெங்களூருவில் இருந்து ஓசூர் வழியாக சென்னைக்கு ரயில் விட வேண்டும், ஓசூர் நகரப்பகுதியில் தென்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் அதிகம் வசிப்பதால் ஓசூர் வழியாக தென்மாவட்டங்களுக்கு கூடுதல் ரயில் விட வேண்டும், பெங்களூரு-நாகர்கோவில் வாரந்திர ரயிலை பெங்களூருவில் இருந்தும், நாகர்கோவிலில் இருந்தம் மாலை 3 மணி முதல் 7 மணிக்கு புறப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓசூர் ரயில்வே ஸ்டேஷனை சேலம் கோட்டத்துடன் இணைக்க வேண்டும். சேலம்-பெங்களூரு வரை இருவழிப்பாதை அமைத்து மின்மயமாக்க வேண்டும், கோவை-பெங்களூரு இண்டர் சிட்டி ரயிலை தினசரி இயக்க வேண்டும், மைசூர்-மாயவரம் வழியாக கூடுதலாக ஒரு ரயில்விட வேண்டும் உள்பட பலர்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து தொழிற்ச்சங்கங்கள், ஹோஸ்டியா, வியாபார சங்கங்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும்

பொதுநலச்சங்கங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீரோடு தேவையான அளவு உரமும் செலுத்தப்படுகிறது. மாங்கன்றுகளுக்கு ஒரே விதத்தில் ஊட்டச்சத்துகள் கிடைப்பதால் விவசாயிக்கு அதிக அளவு மகசூலும், வருவாயும் கிடைக்கும். இந்த புதிய வகை மா சாகுபடி முறையை படிப்படியாக மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தப்படும். இந்த முறையில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 24 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. நுண்ணீர் பாசன திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் தற்போது கரும்பு உள்ளிட்ட அனைத்து பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் நெல் பயிருக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். தோட்டக்கலை துறை இணை இயக்குனர் பெரியசாமி, துணை இயக்குனர் மோகன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாகராஜ். துணை இயக்குனர்கள் சிவக்குமார், ரமேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:57 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: வேளாண்மை துறை சார்பில் சிறுக்களஞ்சி கிராமத்தில் விதைக்கிராமத்திட்ட பயிற்சி முகாம் நடந்தது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் சுப்பிரமணியம் பேசுகையில், ""விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தண்ணீர் பிரச்னையை போக்க சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்த வேண்டும். விவசாய கூலி ஆட்கள் பற்றாகுறை ஏற்பட்டுள்ளதால், காலத்துக்கு தகுந்தார்போல, இயந்திரம் பயன்படுத்த வேண்டும். கால்நடைகளை பயன்படுத்தி இயற்கை உரம் பயன்படுத்த வேண்டும்.

செயற்கை உரத்தை பயன்படுத்த கூடாது. மாவுப்பூச்சியை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்தலாம். பார்த்தினீயம் செடிகளை சாதாரண உப்பை பயன்படுத்தி ஒழிக்கலாம்.

களைக்கொல்லி பயன்படுத்தி ஒழிக்கலாம். வேளாண்மை பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றும்போது தான் வருமானம் அதிக்கரிக்கும். இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

அதற்கு தகுந்தார்போல, வேளாண் பொருட்கள் உற்பத்தி பெருக்க மண் பரிசோனை, சாகுபடி தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்," என்றார்.

விதைத்தன்று அலுவலர் சிவக்குமார் பேசுகையில், ""விதைத்கிராம திட்டத்தின் நோக்கம், விவசாயிகளை விதைகளை நேரடியாக உற்பத்தி செய்து, வேளாண் பொருட்களை உற்பத்தி

செய்ய வேண்டும் என்பது தான். வேளாண்மை துறையில் வழங்கப்படும் மானியத்தை பெற்று விதைகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்," என்றார்.
பயிற்சி முகாமுக்கு சிறுக்களஞ்சி பஞ்சாயத்து தலைவர் கேந்திரமூர்த்தி தலைமை வகித்தார். பாலத்தொழுவு பஞ்சாயத்து தலைவர் செல்வகுமார் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் ராஜாத்தி வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் வாசுதேவன், துணை வேளாண்மை அலுவலர் பாலசுப்பிரமணியன், தோட்டக்கலை அலுவலர் சரஸ்வதி, உதவி விதை அலுவலர் சர்மிளா உள்பட பலர் பங்கேற்றனர்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடம் பருத்தி ஏல விற்பனை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,00:40 IST

கருத்தை பதிவு செய்ய
பெரம்பலூர்: "பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி விற்பனை துவங்கப்பட்டது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துயுள்ளது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்தார். அவர் கூறியதாவது: தமிழக முதல்வர் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினை மேம்படுத்த உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து பஞ்சாயத்துக்களிலும் வேளாண் விற்பனை துறையின் மூலமாக தீவிர பிரச்சாரம் மேற்கொண்டது. டிச., 30ம் தேதி முதல் துவங்கப்பட்டு ஜன., 6ம் தேதி முதல் பருத்தி மறைமுக ஏலம் நடந்தது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு விவசாயிகள் 15 குவிண்டால் பருத்தி கொண்டு வந்திருந்தனர். அதன் மதிப்பு 60 ஆயிரம் ரூபாயாகும். நேற்று நடந்த வர்த்தகத்தில் அதிகபட்சமாக ஒரு குவிண்டால் 4,050 ரூபாய்க்கு விலை போனது. மேற்படி விலை விவசாயிகளுக்கு நல்ல திருப்தியாக இருந்தது என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரம் தோறும் வெள்ளிகிழமையன்று பருத்தி மறைமுக ஏலம் நடைபெறும் இதில் கலந்து கொண்டு விவசாயிகள் அதிக லாபம் அடையலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**அங்கீகாரமற்ற நெல் ரகங்களால் மகசூல் : அங்கீகரித்த ரகங்களை பயிரிட யோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,02:35 IST

மதுரை : மதுரை மாவட்டத்தில் அரசு அங்கீகாரமில்லாத நெல் ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்வதால் நோய் தாக்குதல் ஏற்பட்டு மகசூல் பாதிக்கும் அபாயம் உள்ளது. மாவட்டத்தில் தற்போது 50 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. பெரும்பாலும் அரசு அங்கீகரித்த

ஏ.டி.டி., 39, ஏ.டி.டி.45, ஏ.டி.டி.43, ஏ.எஸ்.டி.16, பி.பி.டி.,5204 உள்பட 10 ரகங்களை விவசாயிகள் பயிரிடுகின்றனர். இவற்றுக்கான நெல்விதைகளை அரசு, விவசாய அதிகாரிகள் மூலம் வழங்குகிறது. தனியார் விதைப் பண்ணையிலும், கடைகளிலும் விதைகளை வாங்கி சாகுபடி செய்கின்றனர்.

சமீப காலமாக தனியார் கடைகளில் அங்கீகாரமற்ற ரகங்களை வாங்கி சாகுபடி செய்யும் போக்கு விவசாயிகளிடம் உள்ளது. ஜெ.சி.எல்., அட்சயா, பூசா, காஞ்சனா, சோணம் போன்ற ரகங்களை விவசாயிகள் வாங்கி உபயோகிக்கின்றனர். இவை ஆந்திரா, கர்நாடகாவில் விவசாயிகள் பயன்படுத்தும் சன்னரக நெல் விதையாகும். இந்த ரகத்தை தமிழகத்தில் பயன்படுத்தும் விதம் குறித்து விவசாய அதிகாரிகளுக்கு தெரிவதில்லை.

மாவட்டத்தில் அங்கீகாரமற்ற ரகங்கள் 4 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சன்னரக நெல் என்பதால் குவிண்டாலுக்கு ரூ. 100 அதிக விலை கிடைக்கும் என விவசாயிகள் கூறுகின்றனர். அதன் சாகுபடி தன்மையை பார்க்கும்போது இவற்றால் விவசாயிகள் பாதிப்பு அடைவது தெரிய வருகிறது. அங்கீகாரம் பெற்ற நெல் ரகங்கள் ஏக்கருக்கு 35 முதல் 40 மூடைகள் வரை கிடைக்கும்போது, இவை 30 மூடைகள் மட்டும் தருகின்றன. இவற்றின் நோய் எதிர்ப்பு சக்தியும் மிகக்குறைவு. புகையான் போன்ற நோய் பாதிப்பு ஏதேனும் வந்தால் அவை பதராகின்றன. மகசூலும் வெகுவாக பாதிக்கின்றன. எனவே இவற்றை விவசாய அதிகாரிகள் சிபாரிசு செய்வதில்லை. மதுரை கிழக்கு யூனியனில் மட்டும் ஆயிரம் ஏக்கரில் த்தகைய ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

உதவி இயக்குனர் கனகராஜ், விவசாய அலுவலர் ஸ்ரீதர் கூறுகையில், ""கள்ளந்திரி பகுதியில் கடந்த முறை "சோணம்' ரகம் சாகுபடி செய்தனர். இதில் "புகையான்' நோய்த் தாக்குதல் அதிகம் இருந்தது. கூடுதல் விலை கிடைக்கும் என்று நினைத்து ஒட்டுமொத்த இழப்பை சந்திக்க வேண்டியிருந்தது. இந்தரக சாகுபடியில் அதிக "ரிஸ்க்' உள்ளதை விவசாயிகள் தெரிந்து கொள்வதில்லை. இந்த ரகங்களில் உத்தரவாதமும் இல்லை. அரசு அங்கீகரித்த நெல் ரகங்களை சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்கும்," என்றனர்.

**திருந்திய கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,02:35 IST

மதுரை : மதுரையில் ஆத்மா திட்டத்தின் கீழ் திருந்திய கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மதுரை மேற்கு வட்டாரம் சார்பில் நடந்த பயிற்சி முகாமிற்கு வேளாண் இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். துணை இயக்குனர் சம்பத்குமார், மேற்கு ஊராட்சி ஒன்றிய தலைவர் பழனியம்மாள் முன்னிலை வகித்தனர். உதவி இயக்குனர் வடிவேல்குமார் வரவேற்றார். கரும்பு பயிரில் உற்பத்தித் திறனை பெருக்கவும், நீர் மற்றும் உரம் போன்ற இடுபொருட்கள் விரயமாவதை, திருந்திய கரும்பு சாகுபடி முறையில் தடுப்பது குறித்தும், சொட்டுநீர் பாசன அமைப்புக்கு அரசு வழங்கும் மானியம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண் துணை இயக்குனர்கள் கதிர்வேல், ராதாகிருஷ்ணன், பேராசிரியை சாலிகா, கரும்பு அலுவலர் சுந்தர்ராஜன் பேசினர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் ரமேஷ்பாண்டியன், துணை அலுவலர் பழனியாண்டவர், உதவி அலுவலர் சேதுராமன் செய்தனர். ஆத்மா வட்டாரத் தலைவர் சோணைமுத்து நன்றி கூறினார்.

**கரும்பு விலை ஏமாற்றம் விவசாயிகள் சங்கம் கடும் விரக்தி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,01:57 IST

ஈரோடு: விளை பொருட்களுக்கு மாநில அரசு குறைந்தபட்ச விலை நிர்ணயம் அறிவிக்க வேண்டும் என, தமிழக விவசாயிகள் சங்கம் மாநில தலைவர் வெங்கடாசலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவரது அறிக்கை:தமிழக அரசின் கரும்பு விலை அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. சென்றாண்டு டி.ஏ.பி., உரம் 460 ரூபாய்க்கு விற்றது, 910 ரூபாய்க்கும், பொட்டாஷ் 260 ரூபாய்க்கு விற்றது, 565 ரூபாய்க்கும், காம்ப்ளக்ஸ் உரம் 320 ரூபாய்க்கு விற்றது, 680 ரூபாய்க்குமாக, 100 சதவீதம் விலை அதிகரித்துள்ளது.

தேர்தல் வாக்குறுதியில் கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாயாக உயர்த்தப்படும் என கூறப்பட்டது. ஆனால், லாரி வாடகை உட்பட 2,100 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கரும்பு விலையை மறு பரிசீலனை செய்து, தேர்தல் வாக்குறுதி படி டன்னுக்கு 2,500 ரூபாயாக அறிவிக்க வேண்டும். நெல், மஞ்சள், குச்சிக்குழங்கு உள்ளிட்ட விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலை நிர்ணயம் செய்ய வேண்டும். புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதியை அதிகப்படுத்த வேண்டும்.

**உருளைக்கிழங்கு விலை அதிகரிக்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2012,22:58 IST

திண்டுக்கல் : உருளைக்கிழங்கு விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் இருப்பு வைத்து விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் மை பல்கலையில் இயங்கி வரும் உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம், விவசாயிகள் பயனடையும் பொருட்டு தேங்காய், உருளைக் கிழங்கிற்கான சந்தை நிலவரங்களை ஆய்வு செய்து முன்னறிவிப்பு செய்துள்ளது.

2011 டிசம்பரில் தேங்காய் ஒன்றின் விலை 7 முதல் 9 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. ஜனவரியில் விலை அதிகரிக்க வாய்ப்புகள் இல்லை. எனவே விவசாயிகள் தேங்காய்களை இருப்பு வைக்காமல் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஜனவரியில் உருளைக்கிழங்கு கிலோ 15 முதல் 17 ரூபாய் வரை விற்பனையானது. பிப்ரவரியில் 18 முதல் 20 ரூபாய் வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளது. கோலார் உருளைக்கிழங்கு சந்தை வரத்தால் பிப்ரவரி 15 க்கு மேல் விலை குறைய வாய்ப்புள்ளது. அறுவடையாகும் உருளைக்கிழங்கினை விவசாயிகள்,பிப்ரவரி 15 க்குள் விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் தெரிவித்துள்ளது.

**விவசாய நிலங்கள் செழிக்க நீர்வரத்து ஏற்படுத்தபடும்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2012,23:07 IST

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர், கடலாடி பகுதியில் இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் விழா முதுகுளத்தூர் எம்.எல்.ஏ., முருகன், மாவட்ட பஞ்., தலைவர் சுந்தரபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடந்தது.
ஊராட்சி தலைவர்கள் திருமால் (பூசேரி), வரதராஜன் (சித்திரங்குடி), கிருஷ்ணமூர்த்தி (மேலச்செல்வனூர்) வரவேற்றனர். பூசேரியில் 335, சித்திரங்குடியில் 613, மேலச்செல்வனூரில் 564, இருவேலியில் 170 பயனாளிகளுக்கும் இலவச மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறிகளை வழங்கி அமைச்சர் சுந்தர்ராஜ் பேசியதாவது: ""முதுகுளத்தூர், கடலாடி, கமுதி பகுதிகளில் பிரதான ஆறுகளிலிருந்து நீர்வரத்து இல்லாததால், இப்பகுதியிலுள்ள விவசாயம் பொய்த்து வருகிறது.

இதனால் விவசாயிகள் இழப்பை சந்தித்து, கிராமத்தை விட்டு இடம்பெயரும் அபாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகளின் நலன்கருதி வைகை ஆற்றிலிருந்து கிருதுமால் நதி வழியாகவும், குண்டாறு, மலட்டாறு, ரகுநாதகாவிரி ஆறுகள் வழியாகவும் நீர்வரத்து தொடர்ந்திட நடவடிக்கை எடுக்கபடும்" என்றார். விழாவில் சிறப்பு அமலாக்க திட்ட தனித்துணை கலெக்டர் திருமலைசாமி, ஒன்றியகுழு தலைவர்கள் சுதந்திரா காந்தி (முதுகுளத்தூர்), மூக்கையா (கடலாடி), துணை தலைவர் பத்மநாதன் (கடலாடி). ஒன்றிய கவுன்சிலர்கள் தர்மர், தனசேகரன், மாவட்ட கவுன்சிலர்கள் கர்ணன், சதன்பிரபாகர், துணை தலைவர்கள் திருக்குமரன் (பூசேரி), பழனிவேல் (மேலச்செல்வனூர்), பாலு (சித்திரங்குடி), ஊராட்சி தலைவர்கள் கல்யாண சுந்தரம் (ஆதங்கொத்தங்குடி), தேவி (வளநாடு), வேலம்மாள் (குமாரகுறிச்சி), சுந்தர்ராஜ் (எஸ்.பி., கோட்டை), புகழேந்தி (கீழச்சாக்குளம்). பி.டி.ஓ., தங்கராஜ், தாசில்தார்கள் பிச்சை (முதுகுளத்தூர்), சேகர் (கடலாடி), துணை தாசில்தார் முத்துலட்சுமி (சிறப்பு அமலாக்க திட்டம்), மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற துணை தலைவர் தட்சணாமூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர் காட்டுராஜா, இளைஞரணி செயலாளர் மாடசாமி, மாவட்ட ஜெ., பேரவை பொருளாளர் மலைக்கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

**குன்னூர் ஏலத்தில் 89% டீத்தூள் விற்பனை**

பதிவு செய்த நாள் : 1/9/2012 2:53:44 AM



குன்னூர்: குன்னூர் (சிடிடிஏ) தனியார் ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான முதல் தேயிலை தூள் ஏலம் நடைபெற்றது. இலை ரகம் 9.60 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.96 லட்சம் கிலோ உட்பட மொத்தம் 13.86 லட்சம் கிலோ தேயிலைதூள் விற்பனைக்கு வந்தது. ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும்

உள்நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றனர்.

ஏலம் விறுவிறுப்பாக நடந்து 89 சதவீத தேயிலைதூள் விற்பனையானது. அனைத்து ரகங்களும் கிலோ ஸி3 வரை உயர்ந்தது.

இலைரகத்தில் சாதாரண வகை கிலோ ஸி46 முதல் ஸி52, உயர்வகை ஸி80 முதல் ஸி155, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ஸி49 முதல் ஸி54, உயர் வகை ஸி85 முதல் ஸி149 வரை விற்பனை ஆனது.

சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக ஸி155ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்திற்கு ஸி215ம் விலை கிடைத்தது

**ஒட்டன்சத்திரம் சந்தையில் வெங்காயம் விலை வீழ்ச்சி விவசாயிகள் கண்ணீர்**

பதிவு செய்த நாள் : 1/9/2012 2:51:05 AM



ஒட்டன்சத்திரம்: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி சந்தைக்கு தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் வெங்காயம் வரத்து உள்ளது. தினமும் 80 கிலோ மூடை ஸி3 ஆயிரம் வரை விற்பனையாகும். வரத்து அதிகரிப்பால் சின்ன வெங்காயம் விலை தரத்திற்கேற்ப கிலோ 3 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது. இந்த கடும் வீழ்ச்சி, ஒட்டன்சத்திரம் பகுதி விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

அவர்கள் கூறுகையில், 'ஒரு ஏக்கர் சாகுபடிக்கு விதை வெங்காயம் கிலோ ஸி30 வீதம், 600 கிலோ வரை பயிரிட்டோம். இதற்கு ஸி18 ஆயிரம் செலவானது. உரம், மருந்து, நடவு, களையெடுப்பு என ஸி20 ஆயிரம் செலவானது. எனவே, ஏக்கருக்கு ஸி35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை செலவிட்டு, ஏக்கருக்கு 4 ஆயிரம் கிலோ வரை மகசூல் கிடைத்துள்ளது. இது நல்ல மகசூல்தான். ஆனால் கிலோ 3 ரூபாய் க்கு விலைபோவது எங்களை நிலைகுலைய செய்து விட்டது' என்றனர்.

வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டு மழை, வெள்ளத்தால் வெங்காய பயிர்கள் சேதமடைந்து, வரத்து குறைந்தன. கப்பல் மூலம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோ னேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தற்போது வரத்து அதிகமாகி ஏற்றுமதியும் இல்லாததால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது' என்றனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *கேரளாவில் மீனவர்களின் நலனுக்காக ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு*

*கோழிக்கோடு,ஜன.9–*
*கேரளாவில் உள்ள மீனவர்களின் நலனுக்காக மத்திய அரசு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உள்ளது.*
*இது தொடர்பாக கேரள அரசு வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–*
*ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு*
*கேரள மாநிலத்தில் உள்ள மீனவர்கள் குடிசை வீடுகளில் வசித்து வருகின்றனர். மேலும் விவசாயம், கல்வி, சாலை, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்பட்டு வந்தனர். மீனவர்களுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்தி கொடுக்க மத்திய அரசு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.*
*முதற்கட்டமாக ரூ.160 கோடி மத்திய அரசு ஒதுக்கி உள்ளது. இதன் மூலம் குடிசைகள் காங்கிரிட் வீடுகளாக கட்டப்படும். ஒரு கிராமத்திற்கு 14.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியின் மூலம் விவசாயம், சாலை, குடிநீர், மின்சாரம், வணிக வளாகங்கள் போன்ற வசதிகள் நிறைவேற்றப்படும். ஒரு கிராமத்திற்கு 200 வீடுகள் வீதம் கட்டப்படும்.*
*பள்ளிகள் சீரமைக்க*
*மீதமுள்ள 40 கோடியின் மூலம் பள்ளிக்கூடங்களில் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவும், புதிய கட்டிடங்கள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.*
*அதன்படி காசர்கோட்டில் அஜனூர் பகுதியிலும், கண்ணூரில் அலிகோடு பகுதியிலும், கோழிக்கோட்டில் மராடு பகுதியிலும், மலப்புரத்தில் தளனூர் பகுதியிலும், திருச்சூரில் கல்பமங்களம் பகுதியிலும், எர்ணாகுளத்தில் செல்லாளம் பகுதியிலும், ஆலப்புழாவில் ஆராட்டுபுழா, திருக்கராபுழா பகுதியிலும், கோட்டயத்தில் புதியதுரா பகுதியிலும், திருவனந்தபுரத்தில் வெளியதுரா பகுதியிலும் பள்ளிக்கூடங்கள் கட்டப்படுகிறது.*
*இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

## குன்னூர் ஏல மையத்தில் 89 சதவீத தேயிலை தூள் விற்பனை ரூ.3 வரை விலை உயர்வு

*குன்னூர், ஜன.9–*

*குன்னூரில் இந்த ஆண்டின் முதல் ஏலத்தில் 89 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை உயர்வு ஏற் பட்டது.*

*ஏலம்*

*குன்னூரில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பு நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் மொத்தம் 51 ஏலங்கள் நடைபெற்று வருகின்றன.*

*இந்த ஆண்டின் முதல் ஏலம் கடந்த 5, 6 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 86 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 9 லட்சத்து 90 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 96 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*விலை உயர்வு*

*ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகம் சுமாராக இருந்தது. ஏற்றுமதியாளர்களை பொறுத்த வரை பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தேயிலை தூளை ஏலம் எடுத்தனர்.*

*முதல் ஏலத்தில் மொத்த தேயிலை தூளின் அளவில் 89 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இதனால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 3 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டது.*

*இலை ரக தேயிலை தூள்*

*சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 155 ரூபாய் என்று இருந்தது. ஆர்தோடக்ஸ் ரக தேயிலை தூள் ரூ.215 என்று உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது. தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 46 ரூபாயில் இருந்து 52 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 155 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரக தேயிலை தூள்*

*டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 49 ரூபாயில் இருந்து 54 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 149 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 2–க்கான ஏலம் வருகிற 12, 13 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. ஏலத்திற்கு மொத்தம் 14 லட்சத்து 90 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*




ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் வரும் மே மாதம் நடைபெறும் மலர் கண்காட்சிக்காக சுமார் 15 ஆயிரம் பூந்தொட்டிகளில் மலர்ச்செடிகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. இந்த மலர்ச்செடிகள் தற்போது நிலவி வரும் பனியினால் கருகாமல் இருக்க காட்டு செடிகள் கொண்டு மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.